வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 28.06.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 180 பக்கங்கள் : 12




# ஆசிரியர் சேவை இனிமேல் அத்தியாவசிய சேவையாகும்

## ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 28

மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளுக்காக ஆசிரியர்கள் காலை வேளையில் பாடசாலைகளில் இருப்பது கட்டாயமானது என்றும், எதிர்வரும் நாட்களில் அவ்வாறு நடக்காமல் போனால் ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

11

# முடிவுக்கு வந்துவிட்டது பொருளாதார நெருக்கடி

## கூறுகிறார் அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, ஜூன் 28

நாட்டின் பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வந்துள்ளமை உறுதியாகியுள்ளது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் கடனை மறுசீரமைக்க கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் மூலமே பொருளாதார நெருக்கடி முடிவடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பாதியில் நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பிப்பதுடன் புதிய அபிவிருத்தி திட்டங்களையும் ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்ப தற்கு கடன் வழங்குபவர்களை சம்மதிக்க வைத்தது நாட்டின் மிகப்பெரிய சாதனைகளில்

11

# ரணிலின் உரைக்கு ஒஸ்காரைவிட மேலான விருது வழங்கவேண்டும்!

## கூறுகிறார் சஜித் பிரேமதாச

கொழும்பு, ஜூன் 28

"நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் உண்மை நிலையை மக்களுக்குச் சொல்ல வேண்டும். அதைவிடுத்து பொய்களைக் கொட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு நேற்று இரவு ஆற்றிய உரை தொடர்பில்



கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

11

# ஆசிரியர்களின் சம்பள பிரச்னைக்கு 2025ஆம் ஆண்டே தீர்வு வழங்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கண்டி, ஜூன் 28

2025 ஆகும் பொழுது நிச்சயம் ஆசிரியர்களின் சம்பள பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்க முன்னர் ஏனைய அசர ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்க வேண்டிய கட்டாயம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

நேற்று கண்டியில் மல்வத்து மகாநாயக்க தேரர்களின் ஆசியை பெற்றபின்னரே ஜனாதிபதி மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

இறுதியாக ஆசிரியர்களின் சம்பளம் 7 ஆயிரம் முதல் 17 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ள நிலையில் அதற்கு மேலதிகமாக கொடுப்பனவுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில வருடங்களாக சம்பளம் உயர்த்தப்படாத எத்தனையோ அரச

11

# கல்வி செயல்பாடுகள் நேற்றும் முடங்கின!

கொழும்பு, ஜூன் 28

நாடளாவிய ரீதியில் நேற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுத்த தொழில்சங்க போராட்டத்தால் கல்விச் செயல்பாடுகள் முழுமையாக முடங்கின.

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அதிபர், ஆசிரியர்கள் நேற்று முன்தினம் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேசமயம், கொழும்பில் பேரணி ஒன்றையும் முன்னெடுத்தனர். இந்தப் பேரணியின்மீது கண்ணீர்புகை குண்டுகளை வீசியும், தண்ணீர்தாரை பிரயோகம் செய்தும் பொலிஸார் கலைத்தனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையை கண்டித்து நேற்றைய தினம் சுகயீன விடுமுறைப்

11

# சீனா பறந்தார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஜூன் 28

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ 4 நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று வியாழக்கிழமை சீனா பயணமானார்.

சீனாவின் அமைதியான சகவாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகள் வெளியிடப்பட்டதன் 70ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் பங்கேற்க அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் விடுத்த அழைப்பை ஏற்று மகிந்த அங்கு சென்றுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தனது பயணத்தில் சீனப்

11

# மயிலத்தமடு மேய்ச்சல் தரையை பண்ணையாளர்களிடம் வழங்குக

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 28

மயிலத்தமடு பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையை அவர்களிடமே ஒப்படைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு மீண்டும் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூலை இரண்டாம் வாரத்தில் மட்டக்களப்புக்கு மீண்டும் செல்லும் ஜனாதிபதி பண்ணையாளர்களை சந்தித்து கலந்துரையாடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு அரச அதிபர், மகாவலி அதிகார

11

# இன்று பாடசாலைகள் வழமைபோல் இயங்கும்

கொழும்பு, ஜூன் 26

இன்று வெள்ளிக்கிழமை அனைத்து அரச பாடசாலைகளும் வழமை போன்று இயங்கும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கங்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட் டிருந்தனர்.

11

# சூளையில் பணியாற்றியவர் மயங்கி விழுந்து மரணம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

சுண்ணாம்பு சூளையில் வேலை செய்த குடும்பஸ்தர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இளவாலை - விளான் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த மனுவல் அன்ரன் மரியதாஸ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் நேற்று சுண்ணாம்பு சூளையில் பணியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அவரை

11

# விமல் வீரவன்ஸ தரப்பிலிருந்து ஜனாதிபதி வேட்பாளர் களத்தில்

## திலித் ஜயவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

விமல் வீரவன்ஸவை மையப்படுத்திய சர்வஜன பலய கூட்டணி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி - தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு தாம் தயாராக உள்ளார் என்று மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் தனது கட்சி பணிமனை திறப்பு விழாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஒருவன் தனது குதிரைக்கு சங்கேத மொழி கற்றுக் கொடுத்தான்.

அவன் "ஐயோ" என்றால் குதிரை நிற்கும். "அப்பாடா" என்றால் ஓடும்.

ஒருநாள் மலைப்பகுதிக்குச் சென்ற அவன் ஒரு புலியைக் கண்ட பதற்றத்தில் - குதிரையும் தறிகெட்டு ஓட - அதை நிறுத்தச் சொல்ல வேண்டிய வார்த்தையை மறந்து விட்டான்.

குதிரை வெகுவேகமாக ஒரு பள்ளத்தாக்கின் முனையை நோக்கி ஓடியது.

எதிரே உள்ள ஆபத்தை உணர்ந்து அவன் தன்னை அறியாமல் , "ஐயோ" என்றான்.

உடனே குதிரை நின்றது.

மயிரிழையில் உயிர் பிழைத்த அவன் நிம்மதியாக "அப்பாடா" என்றான்.

மறுநிமிடம் குதிரை பள்ளத்தாக்கில் பாய்ந்தது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்குவதற்காக கடுமையாக உழைத்துவரும் தமிழ் மக்கள் பொதுச் சபையினர் பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று தமது நிலைப்பாடு தொடர்பாக விளக்கமளித்து வருகின்றனர். அமைதியாக அவர்கள் தமது முயற்சியை செய்துகொண்டிருக்க, அந்த வேட்பாளரை தோற்கடிக்கிறேன் பார் என்று "வீரசபதமெடுத்து" உழைத்துவரும் சிலர் எங்கெல்லாம் அரசியல் கருத்தரங்கு நடக்கின்றதோ அங்கெல்லாம் சென்று தமது விருப்பத்தை நிறைவேற்றி வருகின்றனர்.

அண்மையில், ஒரு கருத்தரங்கில் அழையாவிருந்தாளியாக நுழைந்த நமது மக்கள் பிரதிநிதி ஒருவர், அந்தக் கூட்டத்தில் பொதுவேட்பாளருக்கு எதிரான கருத்துகளைக் கேட்டு மகிழ்ச்சியடைந்ததுடன் அதுபற்றிய தகவல்களையும் தனது சமூகவலைத் தளங்களில் வெளியிட்டு "இன்பம்" அடைந்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் அவர் "மாபெரும்" கூட்டம் நடத்துவதற்கு முன்னர், தொடர்ந்து அதுபோன்ற கூட்டங்களை மாவட்டந்தோறும் நடத்தப்போவதாக அறிவித்திருந்தவர்கள், இப்போது யாராவது நடத்துகின்ற கூட்டங்களில் பிரசன்னமாகி தமது விருப்பத்தை நிறைவுசெய்து கொள்வதை காணமுடிகின்றது.

அதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது.

ஒரு காலத்தில் தமிழகத்தில் அரசியல் கட்சி தொடங்க நினைப்பவர்கள் முதலில் தொடங்குவது தமக்கென்று ஒரு தொலைக் காட்சியைத்தான். டாக்டர் ராமதாஸின் மக்கள் ரீ. வி. முதல், விடுதலை சிறுத்தைகளுக்கென்று தமிழன் ரீ. வி. வரை கட்சிகளுக்காகவே கட்சிகளாலேயே தொடங்கப்பட்டவை. தி. மு. கவுக்கு கலைஞர் ரீ. வி., அண்ணா தி. மு. கவுக்கு ஜெயா ரீ. வி. என்று ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு தொலைக்காட்சி உண்டு.

அதேபாணியில் நம்மவர்களும் தமக்கென்று ஓர் ஊடகத்தைத் தொடங்க முயற்சிக்கின்றனர் அல்லது இருக்கின்ற ஊடகங்களைத் தமக்கு ஆதராக செயல்பட வைக்க முயற்சிக்கின்றனர்.

இப்படித்தான் அண்மையில், நம்மவர் ஒருவரை - அவரின் அரசியல் முயற்சிகளை மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்காகவே கனடாவிலிருந்து ஓர் அமைப்பின் நிதி உதவியுடன் ஓர் இணையப் பத்திரிகை தொடங்கப்பட்ட சங்கதி வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

மாதந்தோறும் அந்த இணையப் பத்திரிகையை தனி ஒருவராக இருந்து நடத்துவதற்காக அவருக்கு ஆறு இலக்கங்களில் சம்பளம், பத்திரிகை வடிவமைப்பாளருக்கு சம்பளம், அலுவலக வாடகை என்று சில இலட்சங்களை மாதந்தோறும் வழங்கி வருகின்றதாம் ஒரு கனடிய தமிழர் அமைப்பு.

அவர்களின் நோக்கம் ஒன்றுதான். தாம் நம்புகின்ற ஓர் அரசியல்வாதியை பற்றி அவர் பெருமைகளைப் பற்றி எழுதிக்கொண்டே இருக்கவேண்டும். அவர் செய்கின்ற "வேலைகளால்" தமிழ் இனத்துக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் அதனைக் கண்டு கொள்ளத் தேவையில்லை. அவர் செய்வது எதுவானாலும் அதுபற்றி புகழ்ந்து அல்லது அதுவே சரியானது என்று எழுதவேண்டும் என்பது மட்டுமே அவர்கள் விதித்துள்ள நிபந்தனை.

இந்த விடயத்தைக் கேள்விப்பட்டபோது அந்தச் சம்பவம்தான் ஞாபகத்துக்கு வந்தது. நல்லாட்சி அரசாங்கத்தின்போது, தான் தயாரித்த "எக்க ராஜ்ய" தீர்வுப்பொதியை வைத்துக் கொண்டு தமிழ் மக்களிடம் அதனை விற்பதற்காக தனி ஓர் ஆளாக தமிழ் அரசின் எம். பி. சுமந்திரன் போராடிக்கொண்டிருந்த காலம்.

சுமந்திரனே யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு விளக்கக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்தில் பேசிய நமது ஊடக ஜாம்பவான் வித்தியாதரன் ஒரு கேள்வியைக் கேட்டார்.

"நீங்கள் தயாரித்து வைத்திருக்கும் இந்தத் தீர்வுப் பொதியைப்பற்றி அல்லது அதிலுள்ள நல்ல விடயங்களைப் பற்றி வெளியே மக்களுக்கு சொல்வதற்கு உங்களுக்கு ஒருவர்கூட துணைக்கு வரவில்லையே" என்று. அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கியபோது சுமந்திரன் தயாரித்த அந்த தீர்வுப் பொதியிலுள்ள விடயங்களை தமிழ் மக்களுக்கு எடுத்துச்சென்று விளக்கமளிக்கக்கூடிய யாரும் கூட்டமைப்பில் இல்லை என்பதையே அவர் கேள்விக்கு உட்படுத்தி ஆதங்கப்பட்டார்.

அவர் அப்போது சொன்னது எவ்வளவு யதார்த்தமானது என்பதைக்கூட அப்போது சுமந்திரன் புரிந்துகொண்டிருப்பாரோ தெரியவில்லை.

இப்போதும் கட்சியிலோ அல்லது ஏன் அவரோடு கூட இருப்பவர்களோ அவர் செய்கின்ற எந்த விடயத்தையும் தர்க்கரீதியாக நியாயப்படுத்தி வாதிடக்கூடியவர்கள் அல்லர்.

இப்படித்தான் எவர் ஒருவருக்காக அல்லது அவர்களின் புகழ் பாடுவதற்காக ஊடகங்களைத் தொடங்குபவர்களும் முதலில் தம்மோடு சரியானவர்களை வைத்திருக்கவேண்டும். இப்படிச் செய்யாமல் ஊடகங்களை தொடங்குவதற்கோ அல்லது தொடர்ந்து நடத்துவதற்கோ நிதி உதவி செய்வதால் மாத்திரம் காரியங்களை செய்துவிடமுடியாது.

மேலே குதிரைக்கு சங்கேத மொழியைக் கற்றுக்கொடுத்தபோல தனது அரசியல் சீடர்களை வைத்திருந்தால் அது ஆபத்தில்தான் முடியும்.

- ஊர்க்குருவி.

## பெருந்தோட்ட துறையில் முறைமாற்றம் ஆட்சி மாற்றத்தின்பின் ஏற்படுத்துவோம்

### மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, ஜூன் 28

அடுத்து வரும் ஆட்சி மாற்றத்தை அடுத்து ஒட்டு மொத்த பெருந்தோட்ட துறையிலும் முறைமை மாற்றத்தை ஏற்படுத்தத் தாம் பணியாற்றி வருவதாக மனோ கணேசன் எம். பி. தெரிவித்தார்.

இலங்கைக்கான ஐ. நா. வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேவுக்கும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினரும் நேற்று சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம். பி. தெரிவித்தவை வருமாறு,

நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை உட்பட, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் பரந்து விரிந்துள்ள பெருந்தோட்ட பிரதேசங்களில், நவீன அடிமைத்துவ அம்சங்களுக்கு மத்தியில், மலையக சமூக குடும்பங்கள் வாழ்கின்றன.

இம்மக்களுக்கு பெருந்தோட்ட நிலங்களில், வதிவிட காணி உரிமை, வாழ்வாதார காணி உரிமை உள்ளிட்ட உரிமைகளை பெற்றுத் தந்து அவர்களை இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக்கும் கொள்கையை தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுக்கின்றது. அடுத்து வரும் ஆட்சி மாற்றத்தை அடுத்து, இது ஒட்டு மொத்த பெருந்தோட்ட துறையிலும் முறைமாற்றமாக பரிணமிக்க வேண்டும். அதற்கான முன் தயாரிப்பு பணிகளில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

இந்த விவகாரங்கள் தொடர்பான உள்நாட்டு அரசியல் சட்டவாக்க நடவடிக்கைளை தமிழ் முற்போக்கு கூட்டணி மேற்கொள்ளும். அதற்கான பலம் மற்றும் தூரப்பார்வை எம்மிடம் உள்ளது. அடுத்த ஆட்சி மாற்றத்துக்கு உள்ளே சென்று திட்டங்களை வகுப்பதை விட, முன்கூட்டியே முன் தயாரிப்பு நடவடிக்கைகளில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம்.

இந்த விவகாரம் தொடர்பில் மலையக சிவில் சமூகத்துடனும் நாம் தற்போது கலந்து உரையாடுகிறோம். மக்கள் ஆணை கொண்ட அரசியல் பிரதிநிதிகளுடன் இணைந்து பணியாற்றக்கூடிய மலையக சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் பற்றியும் நாம் வெகு விரைவில் சர்வதேச சமூகத்துக்கு அறிவிப்போம்.

ஐ. நா. நிறுவனங்களான உணவு விவசாய நிறுவனம், யுனிசெவ், உலக உணவு நிறுவனம் ஆகியவை ஊடாக எமக்கு தொழில்நுட்ப, அபிவிருத்தி, ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையும் நாம் இலங்கை ஐ. நா. வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேயிடம் முன் வைத்துள்ளோம். எமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அவர், ஆவன செய்வதாக உறுதி அளித்தார் - என்றார். (ஐ)

## வடக்கு அபிவிருத்திக்கு தேவையான வசதிகளை ஜனாதிபதி வழங்குவார்

### ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 28

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு தேவையான அடிப்படை கட்டுமானங்களையும் வசதிகளையும் ஜனாதிபதி பெற்றுக்கொடுக்க திட்டமிட்டுள்ளார் என்று வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்கு தலைமை தாங்கியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தொழில் அற்றோர் பிரச்னைக்கு முன்னெடுக்கப்பட்டுள்ள தீர்வு திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநர் கூறினார். ஏனைய மாகாணங்களை போல வடக்கையும் பொருளாதாரத்தில் மேம்பட்ட மாகாணமாக மாற்றுவதே ஜனாதிபதியின் ஆசை.

இந்த திட்டத்துக்குத் தேவையான அடிப்படை கட்டுமானங்களையும், வசதிகளையும் ஜனாதிபதி பெற்றுக்கொடுக்க திட்டமிட்டுள்ளார். பொருளாதார வலயங்களை நிறுவுவதுடன், பலாலி விமான நிலைய சேவைகளையும் காங்கேசன்துறை துறைமுகத்தையும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறான திட்டங்கள் ஊடாக மாகாணத்தின் பொருளாதாரத்தை பலப்படுத்தி, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## யுக்திய நடவடிக்கையில் மேலும் 807 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 28

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் "யுக்திய" விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது நேற்று காலையுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 807 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் போதைப்பொருள் சார்ந்த குற்றங்களோடு தொடர்புடையவர்கள் 773 பேர் எனவும் குற்றப் பிரிவினரின் பட்டியலில் இடம்பிடித்தவர்கள் 34 பேர் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 52 கிலோ 616 மில்லிகிராம் ஹெரோயின், 142 கிலோ ஐஸ், 453 மில்லிகிராம் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் உள்ள திருமறைக்கலாமன்ற மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. இதில் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளை யும் ஒன்றிணையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழ் பொது வேட்பாளர் மட்டக்களப்பில் உரையாடல்!

மட்டக்களப்பு, ஜூன் 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையின் உறுப்பினர்கள் நேற்று வியாழக் கிழமை மட்டக்களப்பு திராய்மடு கிராம அபிவிருத்தி சங்கம் மாதர் சங்கம் மற்றும் விளையாட்டுக் கழக இளைஞர்களுடன் கலந்துரையாடினார்.

அருட்தந்தை ஜீவராஜ், சபா. சிவயோகநாதன், திருமதி வதனி, திருமதி ராகினி, செல்வகுமார் ஆகியோர் தமிழ் மக்கள் பொதுச் சபை சார்பாக கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவதன் அவசியம் குறித்து கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.06.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆனி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒன்றுபடுவதன் முக்கியத்துவம்

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சு. ஜெய்சங்கர் அண்மையில், தமிழ் கட்சிகளின் தலைவர்களை சந்தித்திருந்தார். இதன்போது, தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் கட்சிகளின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டபோது, ஏனையவர்கள் அதற்கு தெளிவான பதிலை வழங்காதபோது ஜெய்சங்கர் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார் - அதாவது, "நீங்கள் அனைவரும் அந்த விடயத்தில் உண்மையான ஈடுபாட்டோடு இருக்கின்றீர்களா?", ஒரு வெளிநாட்டு அமைச்சர் நமது கட்சிகளின் தலைவர்களைப் பார்த்து இவ்வாறு கேட்கின்றார் என்றால் - அதன் பொருள் என்ன? அந்தளவுக்குத்தான் நமது கட்சிகள் பற்றி இந்தியா புரிந்து வைத்திருக்கின்றது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சங் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தபோது இவ்வாறான தொனியில்தான் பேசியிருந்தார். தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் பேசப்பட்ட காலத்திலிருந்து இது சாத்தியமா என்னும் கேள்வியும் கூடவே நடைபோடுகின்றது. கொழும்பிலுள்ள தூதரகங்கள் அனைத்திடமும் இவ்வாறான கேள்விதான் இருக்கின்றது, புருவங்களை உயர்த்தி - நீங்கள் தமிழ் பொது வேட்பாளரை போடப் போகின்றீர்களா என்றே கேட்கின்றனர்.

ஈழத்தமிழர்களால் ஒருபோதுமே ஒற்றுமைப்பட முடியாதென்று எண்ணுபவர்கள்தான் இந்தக் கேள்வியைக் கேட்கின்றனர். தமிழ் மக்களின் நலனை விடவும் தங்களின் சொந்தக் கதிரைகள்தான் முக்கியமென்று எண்ணுவதை அவர்கள் நன்கு புரிந்து வைத்திருப்பதுதான் - அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென்னும் குரல்கள் நீண்டகாலமாக ஒலிக்கின்றன. ஆனால், நமது கட்சிகளால் ஒன்றுபட முடியவில்லை - ஒன்றுபட்டு ஒரு விடயத்தை முன்னெடுக்க முடியவில்லை.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் - அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுபட்டு ஓரணியாக செயல்பட்டால் நிச்சயம் முடியும். ஆனாலும், முடியாது என்னும் பதில் அரசியல் கட்சிகளிடமிருந்து வருகின்றதென்றால் பிரச்னை வேறு. அதாவது, தமிழ் கட்சிகள் ஒற்றுமையுடன் ஒரு விடயத்தை முன்னெடுக்கும் வல்லமையுடன் இல்லை - அதனை தமிழ் கட்சிகளில் சிலர் விரும்பவில்லை. அவர்கள் தொடர்ந்தும் தமிழினம் சிதறுண்டு போக வேண்டுமென்றே எண்ணுகின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் என்பது தமிழ் கட்சிகளின் ஒற்றுமைதான் - வேறு ஒன்றுமில்லை. யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் தொடர்ந்தும் தமிழ் தலைமைகள் பவீனமடைந்து செல்கின்றன. தமிழ் மக்கள் சிதறுண்டு போகின்றனர். இவ்வாறானதொரு நிலையில், தமிழ்த் தேசிய அடிப்படையில் மக்களை ஓரிடத்துக்குக் கொண்டுவர வேண்டியிருக்கின்றது. அதற்கு கட்சிகள் மத்தியில் தமிழ்த் தேசிய ஐக்கியம் ஏற்பட வேண்டும். ஏனெனில், கட்சிகளால்தான் தமிழ் மக்கள் சிதறியிருக்கின்றனர். 2010இல் அவர்கள் சிதறவில்லை - 2016இல் சிதறவில்லை. ஆனால், 2020இல் கூட்டமைப்பு பெரும் பின்னடைவை சந்தித்தது. அதன்பொருள் மக்கள் கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்றனர் - செல்லப் போகின்றனர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - என்பதுபோல் ஐக்கியபட்டால் அனைவரையும் தமிழர் பக்கம் திருப்பலாம்.

## நாதஸ்வர வித்துவான் பஞ்சாபிகேசன் நூற்றாண்டு விழா

நாதஸ்வர வித்துவான் கலாநிதி எம். பஞ்சாபிகேசன் நூற்றாண்டு விழா எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் மருத்துவர் எஸ். எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மூத்த நாதஸ்வர, தவில் வித்துவான்கள் பங்குகொள்ளும் இசைக் கச்சேரி, நாதஸ்வரம் பற்றிய சிறப்பு கட்டுரைகளை உள்ளடக்கிய எம் பஞ்சாபிகேசன் என்ற சிறப்பு மலர் வெளியீடு, பஞ்சாபிகேசன் குறித்து சான்றோர் ஆற்றும் உரைகள், மூத்த நாதஸ்வர, தவில் கலைஞர்களுக்கான பஞ்சாபிகேசன் நினைவு தங்கப் பதக்கம் வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கலாநிதி பஞ்சாபிகேசன் 91 ஆண்டுகள் இந்த மண்ணில் வாழ்ந்தவர். தனது 85ஆவது வயது வரை நாதஸ்வர இசைக் கச்சேரிகளை நிகழ்த்தியவர் என்பதுடன், 2010ஆம் ஆண்டு அவருக்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டத்தை அளித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சத்சங்கம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுன் 28

தென்கயிலை உலக சமாதான ஆலயத்தின் யாழ்ப்பாண கிளையின் 5ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு யாழ். நகரில் சிறப்பு சத்சங்கம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி சிவஹாமி மஹாலில் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் உலக சமாதான அறக்கட்டளை நிறுவுநர் குருமகான் அருளுரை ஆற்றுவார்.

சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக சி. சிறீசற்குணராஜா கலந்துகொள்வார்.

## முத்துக்குமாரசுவாமி குருபூசை

யாழ்ப்பாணம், ஜுன் 28

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பாலை. திருகுணானந்த குருக்களால் வாராந்த திருவாசக சிறப்புச் சொற்பொழிவும் மாதாந்த ஈழத்து சித்தர்கள் குருபூசையும் நடத்தப்படுகின்றது.

இதன் மூன்றாவது தொடரில் முத்துக்குமார சுவாமிகள் குருபூசை சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார். முத்துக்குமார சுவாமிகள் குருபூசையை தொடர்த்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் "எல்லோரும் வணங்கும் முத்துக்குமார சுவாமிகள்" என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ. த. குமரனின் சொற்பொழிவும் நடைபெறும்.

தொடர்ந்து ஆன்மீக விருந்தினர் உரையும் குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## இருட்டின் காதலி கவிதை நூல் வெளியீட்டு விழா




யாழ்ப்பாணம், ஜுன் 28

காயத்ரியின் "இருட்டின் காதலி" கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல. 24, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்துக் கல்லூரி முன்பாக) நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கவிஞர் இ. த. ஜெயசீலன், கருத்துரையை அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர் ம. அரவிந்தன், கவிதை வாசிப்பை செ. ராகவேந்தன், நூல் அறிமுக உரையை ஆசிரியர் சிறீலேகா பேரின்பகுமார், நூல் மதிப்பீட்டுரையை பேராசிரியர் ச. முகுந்தன் ஆகியோர் ஆற்றுவர். (ஐ)

## சுக்கிர வார சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜுன் 28

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

இதில், இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன் "ஆன்மீகம் தரும் நல் வாழ்வு" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**இடபம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் 2, 3 முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன் கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**துலாம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

# தி. மு. க. அரசைக் கண்டித்து அ. தி. மு. க. உண்ணாவிரதம்

சென்னை, ஜுன் 28

தி. மு. க. அரசைக் கண்டித்தும், கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் தொடர்பில் சி. பி. ஐ. விசாரணை கோரியும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்ட அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்றுக்காலை 7 மணி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக தமிழக சட்டசபை கூட்டத்தொடரில் இருந்து அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையைக் கண்டித்தும், கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தில் சி. பி. ஐ. விசாரணை கோரியும் முன்னாள் முதல்வர் பழனிச்சாமி தலைமையில் அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் சென்னை எழும்பூரில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)



# "முழக்கம் எழுப்பக் கூடாது" அ. தி. மு. கவுக்கு நிபந்தனை

சென்னை, ஜுன் 28

"உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும் அரசியல் தலைவர்கள், தனிப்பட்ட நபர்கள், அரசு அதிகாரிகளைத் தாக்கிப் பேசவோ, முழக்கம் எழுப்பவோ கூடாது" என்பது உட்பட 23 நிபந்தனைகளை அ. தி. மு. கவினருக்கு பொலிஸார் விதித்துள்ளனர்.

தி. மு. க. அரசைக் கண்டித்து எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி தலைமையில் அ. தி. மு. க. எம்.எல். ஏக்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் அ. தி. மு. கவினரின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு சென்னை மாநகர பொலிஸார் 23 நிபந்தனைகளை விதித்துள்ளனர். இதன்படி," உண்ணாவிரதப் போராட்டம் அமைதியான முறையில் நடத்தப்பட வேண்டும். போராட்டம் நடத்தும் இடத்துக்கு எந்தக் காரணத்தை கொண்டும் வாகனங்களைக் கொண்டுவரக்கூடாது.

பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிடும் இடத்தில்தான் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். அரசியல் தலைவர்கள், தனிப்பட்ட நபர்கள், அரசு அதிகாரிகளைத் தாக்கிப் பேசவோ, முழக்கம் எழுப்பவோ கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (எ)

# நேர்மையாக விவாதம் நடத்த முதல்வர் தயங்குவது ஏன்?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

சென்னை, ஜுன் 28

சட்டமன்றத்தில் நேர்மையாக விவாதம் நடத்த பல முறை முயன்றும் முதல்வர் தயங்குவது ஏன்? என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

எடப்பாடி பழனிச்சாமி எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் குறித்து எனது தலைமையிலான கழக சட்டமன்ற உறுப்பினர்கள் நேர்மையான விவாதம் நடத்த பல முறை சட்டமன்றத்தில் முயன்றும் தி. மு. க. முதலமைச்சர் தயங்குவது ஏன்?



விஷ சாராய மரணங்கள் 60-ஐ தாண்டியுள்ள நிலையில், இன்றுவரை கள்ளக்குறிச்சி சென்று மக்களைச் சந்திக்காதது ஏன்? பயமா ஸ்டாலின்?

விஷ சாராய மரணங்கள் குறித்து சி. பி. ஐ. விசாரிப்பதோடு, இதற்குப் பொறுப்பேற்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் உடனடியாக பதவிவிலக வேண்டும்!" என்றும் பழனிச்சாமி தெரிவித்துள்ளார். (எ)

# சி. பி. ஐ. கோரிக்கை வழக்கு ஒத்திவைப்பு

சென்னை, ஜுன் 28

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பான வழக்கை சி. பி. ஐக்கு மாற்றக் கோரி அ. தி. மு. க. மற்றும் பா. ம. க. சார்பில் தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணையை சென்னை உயர் நீதிமன்றம் ஜுலை ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது. (எ)

# சாதி வாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும்

சென்னை, ஜுன் 28

மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதி வாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ)

# ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு கோரிய அண்ணாமலை



சென்னை, ஜுன் 28

தன்னைப் பற்றித் தவறான தகவல்களைப் பரப்பியதாக தி. மு. க. அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதியிடம் ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு கோரி பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை அறிவித்தல் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும், இந்த அறிவித்தல் கடிதம் பெற்ற மூன்று நாட்களில் நிபந்தனையற்ற மன்னிப்பு கோர வேண்டும் என்றும், நஷ்டஈடாக பெறப்படும் பணத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரத்தில் போதை மறுவாழ்வு மையம் அமைக்கப்படும் என்றும் அந்த அறிவித்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 60 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்த சம்பவத்தில் அண்ணாமலையின் சதி இருக்குமோ? என்று சந்தேகப்படுவதாக ஆர். எஸ். பாரதி கடந்த 23 ஆம் திகதி புதுக்கோட்டையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின் போது குறிப்பிட்டிருந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க குழுவின் சட்டவரைவுக்கு ஆலோசனை பெற கலந்துரையாடல்!



கிளிநொச்சி, ஜூன் 28

**உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான உத்தேச சட்ட வரைவுக்கான ஆலோசனைகளை பெறுவதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.**

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம், உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான உத்தேச ஆணையம் என்பன வடக்கு - கிழக்கில் மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், அநீதிகளை நிவர்த்தி செய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

இந்தவகையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான விளக்கத்தை வழங்கவும் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவதற்கான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நான்கு அமர்வுகளாக நடைபெற்றது.

இலங்கையில் தேசிய நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சமூக நீதியை மேம்படுத்தும் நோக்கில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் ஏற்பாட்டில் குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

1983 - 2009 ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது இடம்பெற்றவை என்று கூறப்படும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான உண்மையை கண்டறிய பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படும் ஒரு சுயாதீனமான நிறுவனமாக உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேச ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் முறையாக தகவல்களைத் திரட்டல், வன்முறைகளின் போது நடந்த விடயங்களை அறிக்கையிடல், கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க பரிந்துரை வழங்குதல் மற்றும் மோதலுக்கு பிந்தைய இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பாரபட்சமற்ற அமைப்பாக பயன்படுத்துவது இதன் நோக்கமாகும்.


இவற்றில் ஒரு கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

அடுத்த கலந்துரையாடல் இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

மூன்றாவது கலந்துரையாடல் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.

நான்காவது கலந்துரையாடல் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், முன்னாள் போராளிகள், அங்கவீனமுற்றோர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இங்கு, நாட்டில் தேசிய நல்லிணக்கத்துக்கான உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் தற்போதைய வேலைத் திட்டங்கள் குறித்தும் இந்த சுயாதீன ஆணைக்குழுவை நிறுவுவதற்கான உத்தேச சட்டமூலம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. (ஐ)



# கதிர்காமத்துக்கான பாதயாத்திரை இளைஞர்களால் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஜூன் 28

இளைஞர் சேவை மன்றத்தின் கதிர்காமம் யாத்திரையின் இரண்டாம் நாள் பயணம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் ஆன்மீக பாத யாத்திரை நேற்றுமுன்தினம் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்று யாத்திரை செல்லும் 4 இளைஞர்களுக்கு வேல் கையளிக்கப்பட்டு யாத்திரை ஆரம்பமானது.

இரண்டாம் நாளான நேற்று கிளிநொச்சி கரடிபோக்கு சந்தியில் வரவேற்கப்பட்ட பாத யாத்திரிகர்களுடன் கிளிநொச்சியைச் சேர்ந்த 4 இளைஞர்கள் பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்தனர். அங்கு விசேட பூசை நடைபெற்றது.

தொடர்ந்து பாதயாத்திரைக்கான பொதிகள், பயண செலவு என்பன அந்தக் குழுவுக்கு கையளிக்கப்பட்ட.

வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நால்வர் இந்த யாத்திரையில் இணைவர். அத்துடன், 50 சிங்கள இளைஞர்களும் இணைவர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கலாச்சார உத்தியோகத்தர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடக்கு மாகாண பணிப்பாளர் கே.காமினி மற்றும் கிளிநொச்சி உதவிப் பணிப்பாளர் இளைஞர் சேவைகள் உத்தியோகஸ்தர்கள், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மற்றும் உறுப்பினர், பிரதேசங்களின் இளைஞர் சம்மேளனங்களின் உறுப்பினர்கள், நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



# எரிந்த நிலையில் மோ. சைக்கிள் உடுவிலில் இனங்காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 28

எரியூட்டப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று உடுவில் தெற்கு பிள்ளையார் கோயில் அருகே உள்ள காணியில் இனங்காணப்பட்டது.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றிருக்கலாம் என கருதப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் யாருடையது என்று இனங்காணப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளர் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் அளித்தார்.

சம்பவ இடத்துக்கு சென்ற சுன்னாகம் பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரமும் எரியூட்டப்பட்ட நிலையில் கோப்பாயில் மோட்டார் சைக்கிள் ஒன்று அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியா பல்கலை. கல்விசாரா ஊழியர்கள் ஊர்வல போராட்டம்




வவுனியா, ஜூன் 28

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை கவன வீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

நாடு பூராகவும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 57ஆவது நாளாகவும் தமது பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், சத்யாக்கிரக போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் போராட்டத்தில் ஈடுப்பட்ட ஆசிரியர், அதிபர்களின் பேரணிமீது தண்ணீர் தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதை கண்டித்தும் தமது சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றவும் வலியுறுத்தியுமே இந்த ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள்பீட கட்டடத் தொகுதியிலிருந்து ஆரம்பித்த ஊர்வலமானது நகர் வழியாக பழைய பேருந்து நிலையத்தை சென்றடைந்து நிறைவடைந்தது. (ஐ)

# பால் புரைக்கேறியதில் பெண் குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

பால் புரைக்கேறியதில் பிறந்து 40 நாட்களேயான பெண் குழந்தை ஒன்று உயிரிழந்தது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இணுவில் கிழக்கு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிகாலை வேளை குழந்தை அசைவற்று கிடப்பதை அவதானித்த குழந்தையின் பெற்றோர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு சென்றனர்.

குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

குழந்தையின் உடல்கூற்றுப் பரிசோதனை யாழ். போதனா மருத்துவமனையில் இடம்பெற்றது. இதில், பால் புரைக்கேறியதில் குழந்தை உயிரிழந்தமை தெரிய வந்தது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டிருந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையின் மூத்த அதிகாரி யுவதிக்கு பாலியல் துன்புறுத்தல்!

## சம்பவத்தை மூடிமறைக்க அதிகார தரப்பு அழுத்தம்

கொழும்பு, ஜூன் 28

**கடற்படையின் மூத்த அதிகாரி ஒருவர் இந்தியாவை சேர்ந்த யுவதியை பாலியல் துன்புறுத்தல் செய்த சம்பவம் தொடர்பான விசாரணையை கைவிடுமாறு அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாக தென்னிலங்கை ஊடகங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.**

கடந்த 20ஆம் திகதி அதிகாலை கொழும்பு - பம்பலப்பிட்டி, டூப்ளிகேஷன் வீதியிலுள்ள இரவு விடுதியில் குறித்த யுவதி தனது இலங்கை நண்பருடன் மது அருந்திக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயம் அங்கு வந்த கடற்படையின் உயர் அதிகாரி அந்த யுவதியின் பின்புறமாக வந்து அவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

தன்னை துன்புறுத்தியவர் கடற்படைக்கு சொந்தமான காரில் வேறு சிலருடன் விடுதியிலிருந்து வெளியேறியிருந்தார் என்று தனது முறைப்பாட்டில் தெரிவித்த இந்திய யுவதி, அந்த வாகனத்தின் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து, கடற்படை அதிகாரியிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றனர் என்றும் அதில் அவர் தான் எவ்வாறான துன்புறுத்தலையும் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருக்கும் தெரியப்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், குறித்த இரவு விடுதியின் பாதுகாப்பு கமெராக்களை சோதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன், இந்த சம்பவத்தை மூடி மறைக்க அதிகாரத் தரப்பு முயல்வதாகவும் தென்னிலங்கை ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

(ஐ)

# கெஹலியவின் எழுத்தாணை மனு; விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தாக்கல் செய்த எழுத்தாணை (ரிட்) மனு நேற்று மீண்டும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஜூலை முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று, சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன் நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்தார்.

மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தால் தன்னை வழக்கு விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எழுத்தாணை மனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சட்டமா அதிபரின் காலநீடிப்பு மீண்டும் நிராகரிக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 28

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்கான ஜனாதிபதியின் யோசனையை அரசமைப்பு பேரவை மீண்டும் நிராகரித்துள்ளது.

இதன்போது, மீண்டும் வாக்கெடுப்பு இடம்பெற்றுள்ள நிலையில் குறித்த யோசனைக்கு எதிராக 5 உறுப்பினர்களும் ஆதரவாக 3 உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். (ஐ)



# சுகாதார துறை ஊழல் குறித்து விழிப்புணர்வு செயலமர்வு!

கொழும்பு, ஜூன் 28

ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல் ஒவ் சிறீ லங்கா நிறுவனமும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் இணைந்து மக்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வை நடத்தின.

“சுகாதார துறை கொள்முதல் ஊழலும் அதனால் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்னைகளும் அது பற்றிய அறிக்கையிடலும் என்ற தலைப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை டேவிட் வீதியிலுள்ள திருமறை கலாமன்றத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இதில் பல அமைப்புகளிலிருந்தும் பயனாளர்கள் பங்குபற்றினர். பங்கேற்றவர்களில் இருந்து 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு அது தொடர்ந்தும் சுகாதார துறை பற்றிய பிரச்னைகளை அறிக்கையிடுவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த செயலமர்வில் சிரேஷ்ட வளவாளராக ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல் ஒவ் சிறீ லங்கா நிறுவனத்தின் வவுனியா பணிமனை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் எஸ். தினேஷ்குமார், உதவி வளவாளராக யாழ். மாவட்ட ஆர். ரி. ஐ. மையத்தின் இணைப்பாளர் செ. சிவானந்தனும் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வு இன்று!

கொழும்பு, ஜூன் 28

இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்பை உறுதிபடுத்தும் நோக்கில் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட ”ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் - 2024” விருது வழங்கும் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முற்பகல் 10.00 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு ஜனாதிபதியின் சுற்றுச்சூழல் விருதுகளுக்காக 901 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதில் தங்கம், வெள்ளி, வெண்கலம், தகுதி என 124 ஜனாதிபதி விருதுகள் வழங்கப்படவுள்ளன.

சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர, வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் வேணுர பெர்னாண்டோ, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பி. பி. ஹேமந்த ஜயசிங்க, விருது பெற்றவர்கள் மற்றும் பல முக்கிய விருந்தினர்கள் இந்நிகழ்வில் பங்கேற்க உள்ளனர்.

இதில் சீனா, எகிப்து, இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இங்கிலாந்து, கனடா, ஈரான் ஆகிய நாடுகளின் தூதர்களும் பங்கேற்கவுள்ளனர்.

(ஐ)

# பொது மலசலகூடத்தில் இரண்டு சடலங்கள் மீட்பு

நுவரெலியா, ஜூன் 28

நுவரெலியா பிரதான பேருந்து தரிப்பிடத்தில் உள்ள பொது மலசலகூடத்தில் இருந்து இரு சடலங்கள் மீட்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு புதன்கிழமை 71 வயது நபரின் சடலமும் நேற்று வியாழக்கிழமை 51 வயது நபரின் சடலமும் மீட்கப்பட்டன.

மலசல கூடத்தில் இருவர் விழுந்து கிடந்ததை அவதானித்த பொதுமக்கள் 1990 அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அறிவித்தனர்.

அங்கு வந்த முதலுதவியாளர்கள் அவர்கள் ஏற்கனவே இறந்து விட்டதை உறுதிப்படுத்தினர்.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 19 கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து பல்கலைக்கழகம்

கொழும்பு, ஜூன் 28

நாட்டிலுள்ள 19 தேசிய கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து கல்விக்கான தேசிய பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசியக் கல்வியியல் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படும் பயிலுநர்கள் 3 வருட பயிற்சியின் பின்னர் தகுதியான ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியாவோர், கல்வியியல் துறை இளங்கலைமாணி பட்டம் பெற்ற ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

சர்வதேச கல்வித் தரத்தைப் பேணுவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்காக நாட்டிலுள்ள 19 கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து கல்விக்கான தேசிய பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ)

# இரு பேருந்துகள் விபத்து; 11 பேர் காயமடைந்தனர்!

கொழும்பு, ஜூன் 28

இரண்டு தனியார் பேருந்துகள் மோதிய விபத்தில் 11 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 7 பெண்களும் 4 ஆண்களும் அடங்குவர்.

பதுளை - வெலிமடை - அம்பகஸ்தோவ பகுதியில் நேற்று வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெலிமடை - அம்பகஸ்தோவ வீதியின் - தரகல பகுதியில் முன்னே சென்றுகொண்டிருந்த பேருந்தை பின்னால் சென்ற பேருந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தின் மறுசீரமைப்பில் பல விடயங்கள் சிக்கலுக்குரியவை

## எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார்

**கொழும்பு, ஜூன் 28**

**சர்வதேச நாணய நிதிய திட்டம் மற்றும் கடன் மறுசீரமைப்பு திட்டங்கள் குறித்து நேற்று (நேற்றுமுன்தினம்) பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. கடன் மறுசீரமைப்பு செயல்முறை நாட்டுக்கு நன்மைபயக்கும் என்றால் அதற்கு ஆதரவை வழங்குவோம். என்றாலும் வெளிப் படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் சிக்கல்கள் உள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ் களுத்தறை, புளத்சிங்கள ரெமுன மகா வித்தியாலத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறையை வழங்கி வைக்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்,

2028 வரை கடனை செலுத்துவதற்கு கால அவகாசம் விதிக்கப்பட்டுள்ளது. 2028 முதல் கடன் தவணைகளைச் செலுத்த வேண்டும். இது ஒரு நல்ல விடயம்போல் தெரிந்தாலும், சர்வதேச நாணய நிதியத்தின் 2023 மார்ச் அறிக்கை கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின்படி, நாம் 2033 முதலே கடனை திருப்பிச் செலுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதிய அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த இணக்கப்பாட்டு கலந்துரையாடலால் 2033 இலக்கை எட்ட முடியாது போயுள்ளது. 2028 ஆம் ஆண்டு முதல் கடன் தவணைகளை செலுத்துவதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

மேலும், சகல நாடுகளையும் விட நமது நாடு கடன் மறுசீரமைப்பு செயல்முறையை வேகமாக பூரத்தி செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அது முற்றிலும் தவறான கருத்தாகும். எமது நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை இன்னும் முடிவடையவில்லை. செயல்முறையை முழுமைப்படுத்தாமல் இவ்வாறான பொய்யை மக்களிடம் சொல்வது தவறாகும். எம்மைவிட வேகமாக தங்கள் கடனை மறுசீரமைப்பு செயல்முறையை முழுமையாக மறுகட்டமைத்த பல நாடுகள் உள்ளன.

ஒரு நாடாக நாம் ஒரு முழுமையான இணக்கப்பாட்டை எட்டவில்லை. சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்கள் அடங்களாக சர்வதேச வணிக் கடன் தரப்பினரோடு இதுவரை எந்த நிலையான இணக்கப்பாடுகளையும் எட்டவில்லை. இந்த கலந்துரையாடல்கள் ஜூலை 3 ஆம் திகதி வரை தொடர்கிறது. இறுதி இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால், எமது நாட்டுக்கு எதிராக வழக்குத் தொடரவும் குறித்த தரப்பினர் தயார் நிலையில் உள்ளனர்.

சீன அபிவிருத்தி வங்கியுடனும் நாம் கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டும்தான். சாம்பியா மற்றும் ஈக்வடார் ஆகிய நாடுகளுக்கு இந்த வங்கி இரு தரப்பு கடன்களையே வழங்கியிருந்தாலும், எமது நாட்டுக்கு வணிகக் கடனாகவே வழங்கியுள்ளது. இங்கும் பல பிரச்னைகள் எழுகின்றன.

எக்ஸிம் வங்கி, எமது நாட்டில் உள்ள அரச முயற்சியாண்மைகளுக்கு கடன் வழங்கியுள்ளது. நீர் வழங்கல் மற்றும் தாமரை கோபுரம் நிர்மாணிப்பதற்கு இந்த கடன் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்த எந்த வெளிக்கொணர்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தற்போது சிறீ லங்கன் விமான சேவையின் 179 மில்லியன் டொலர் பிணைமுறி பத்திரங்களுக்கான காலக்கேடு முடிவடையவுள்ளது. இந்த பத்திரதாரர்கள் கடன் வெட்டுக்கு உடன்பாடில்லை.

இவர்கள் வழக்கு தொடரவும் தயாராகி வருகின்றனர். இந்த பிணைமுறி பத்திரங்களின் காலக்கேடு முடிவடையும் திகதி நெருங்கி வருவதால், இது குறித்து அரசாங்கம் எடுக்கும் கொள்கை நிலைப்பாடு என்ன? அந்த கொள்கை நிலைப்பாட்டை நாட்டு மக்கள் தெரிந்து கொள்வது அவசியம்.

இதுபோன்ற பல சிக்கல்களும், பிரச்னைகளும் இருக்கின்றன. இது குறித்த சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தத் தகவல்கள் தொடர்பில் அறிவியல்பூர்வமாக பகுப்பாய்வுகளை செய்து, நாட்டுக்கு ஏற்படும் நன்மை தீமைகள் குறித்த உண்மைகளை மக்களிடம் முன்வைக்கத் தயார் - என்றார்.

(ஐ)

# மடு அன்னையின் ஆடித்திருவிழா ஏற்பாட்டு கலந்துரையாடல் நேற்று

மன்னார், ஜூன் 28

மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று மடுத் திருத்தல கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் ஏற்பாட்டில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

இதில் சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், மின்சாரம், பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புகளுடன் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஆரம்பமானது. தொடர்ந்து நவநாள் திருப்பலி தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறை மாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கவுள்ளனர்.

இதில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக் கணக்கான மக்கள் மடு அன்னையின் ஆசி பெற வருகை தருவர். சகல விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், கடற்படை மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# தங்களின் உரிமை கோரி பால்புதுமையினர் பேரணி

கொழும்பு, ஜூன் 28

பால்புதுமையினர் தங்கள் உரிமைகளை வலியுறுத்தியும் தங்களையும் சக மனிதர்களாக எண்ண வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தும் நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபவனி ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த நடைபவனி வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகி, நகர் வழியாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் அருகே நிறைவடைந்தது.

"யாழ். சங்கம்" என்ற பால்புதுமையினத்தவர்களுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நடைபவனியில் சுமார் 50 பேர் வரையிலானோர் கலந்துகொண்டனர்.

இந்த நடைபவனியில் தமது உரிமைகளை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தாமும் உணர்வுகள் கொண்ட மனிதப் பிறப்புகளே என்பது போன்ற கருத்துகளை பால்புதுமையினர் இதன்போது முன்வைத்திருந்தனர்.

(ஐ)

# தேசிய அரசு அமைக்க முயற்சி சம்பிக்க ரணவக்க பிரதமராவார்!

கொழும்பு, ஜூன் 28

தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார் என்று அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நகர்வுகளில் ஈடுபட்டு வருகிறார்.

அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள தமது நெருங்கிய நண்பர்களுடன் அவர் இரகசிய கலந்துரையாடல்களையும் நடத்தி வருகிறார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களான ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா ஆகியோருடன் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

ராஜித சேனாரட்ன, ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல ஆதரவளிப்பது அனைத்துக் கட்சிகளினதும் கடமை என தெரிவித்துள்ளார்.

அவர் விரைவில் அரசாங்கத்தில் இணைந்துக்கொண்டு சுகாதார அமைச்சுப் பொறுப்பை ஏற்பார் என அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகாவையும் இணைத்துக்கொண்டு தேசிய அரசாங்கத்தை அமைக்கும் ரணில் முயற்சிகள் ஓரளவு வெற்றியடைந்துள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் 15 - 20 எம்.பிகள் வரை தேசிய அரசாங்கத்தில் இணைந்துக் கொள்ள உள்ளதாகவும் தெரியவருகிறது.

தேசிய அரசாங்கத்தின் பிரதமராக சம்பிக்க ரணவக்கவை நியமிக்கும் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அதுகுறித்த கலந்துரையாடல்கள் நடப்பதாகவும் கூறப்படுகின்றன. (ஐ)

# பெரமுனவின் 21 எம். பிக்களுக்கு மாதாந்தம் 2 இலட்சம் ரூபாய்?

கொழும்பு, ஜூன் 28

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் 21 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தின் பலம் வாய்ந்த நபரொருவரின் தலையீட்டின் ஊடாக மாதாந்த கொடுப்பனவாக தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொடுப்பனவு பெறும் குழுவில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு ஆதரவை பெறுவதற்காகவே இந்த கொடுப்பனவு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த எம். பி. ஒருவர் தமக்கும் அவ்வாறான தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலையை எதிர்க்கும் மக்களுக்கு ஆதரவு அதிகரிப்பு



மூதூர், ஜூன் 28

**திருகோணமலை மூதூர் இருதயபுரம் பகுதியில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபானசாலைக்கு எதிராகப் போராடிவரும் மக்களுக்கு ஆதரவாக அரசியல்வாதிகளும், சமூக ஆர்வலர்களும் களமிறங்கியுள்ளனர்.**

அருட்தந்தையர்கள், பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் மாவட்ட கிளைத் தலைவர் சண்முகம் குகதாசன், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களைச் சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடினர்.

மூதூர் இருதயபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட மதுபான சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட பேரை மூதூர் பொலிஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்து புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.

இந்த நபர்கள் அனுமதியின்றி ஒன்று கூடியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸாரை தாக்கியமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)



# உறுதி வழங்கும் நடமாடும் சேவை

சம்மாந்துறை, ஜூன் 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையில் உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கான தெளிவூட்டல் மற்றும் காணி ஆவணங்களைப் பொறுப்பேற்றல் குறித்து நடமாடும் சேவை கடந்த 26 ஆம் திகதி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைபெற்று வருகின்றன.

இதில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனிபா தலைமையில் காணி உறுதி வழங்கும் நடமாடும் சேவை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

(எ)

# "தமிழ் மக்களுக்கு எதிரான அராஜகங்களை நிறுத்துக"

மூதூர், ஜூன் 28

திருகோணமலை, மூதூரில் தமிழ் மக்களுக்கு எதிராக அரங்கேறும் அராஜகங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர், சட்டத்தரணி க. சுகாஷ் தெரிவித்தார்.

மூதூரில் மதுபானசாலைக்கு எதிராகப் போராட்டம் நடத்திய மக்கள் மீது இரவோடிரவாகத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

தொடர்ச்சியாக மூதூர் பொலிஸார் இரவு வேளைகளில் திட்டமிட்டு இந்தக் கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இரவுவேளை என்பதால் ஆதாரமின்றி முறைகேடுகளில் ஈடுபடுவதும் அச்சுறுத்துவதும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட மனித உரிமை மீறலாகும்.

எனவே, தமிழ் மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட மதுபான சாலை மூடப்பட வேண்டும் என்றும் சுகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

(எ)

# கல்வி சாரா ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது




கல்முனை, ஜூன் 28

இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் கல்வி சாரா ஊழியர்கள் கடந்த 57 நாட்களாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகின்றனர். இதற்கு ஆதரவாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும் ஊழியர்களின் போராட்டம் வலுவடைந்து வரும் நிலையில் நேற்று ஒரு பக்கம் ஊழியர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம், மறுபுறம் நியாயம் கோரி பேரணி என பல்கலைக்கழகம் போராட்டத்தால் அதிர்ந்தது.

(எ)

# ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு உகந்தையில் மாபெரும் சிரமதானம்



உகந்தை, ஜூன் 28

அம்பாறை, உகந்தை மலை முருகன் ஆலய ஆடிவேல் பெருந்திருவிழாவை முன்னிட்டும், கதிர்காமம் பாதயாத்திரையை ஒட்டியும் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உகந்தையில் பாரிய சிரமதானமொன்றை மேற்கோண்டனர்.

காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுல் நாயகி சஜிந்திரனின் வழிகாட்டலில் இந்த ஆண்டிற்கான உகந்தை முருகன் ஆலய சிரமதான நிகழ்வுகள் நிர்வாக உத்தியோகத்தர் த. கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, பாதயாத்திரை செல்பவர்களால் இயற்கை மற்றும் விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் முகமாக" பொலித்தீன் பாவனையைத் தடுத்தல் மற்றும் நீரினை கண்ணியமாக பயன்படுத்துதல் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகள் ஆங்காங்கே பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் காட்சிப்படுத்தப்பட்டன.

(எ))

# இராஜாங்க அமைச்சருடன் கிழக்கு ஆளுநர் சந்திப்பு



திருகோணமலை, ஜூன் 28

கதிர்காமத்துக்கு பாதையாத்திரையில் ஈடுபடும் பக்தர்களுக்காக உகன தேசிய பூங்கா வாயிற் கதவுகளைத் திறக்கும் திகதிகள் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனுடன் பாதுகாப்பு அமைச்சில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது என்று கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜூன் மாதம் 30 ஆம் திகதி காலை 6 மணிக்கு வாயிற் கதவுகளைத் திறப்பதற்குத் தயாராகுமாறு அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்ட செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சதிப்புரட்சி முறியடிப்பு

## கிளர்ச்சி குழுத் தலைவர் கைது




லா பாஸ், ஜூன் 28

**பொலிவியாவில் சதிப்புரட்சி முயற்சியில் ஈடுபட்ட கிளர்ச்சிக் குழுவின் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார். சதிப்புரட்சி முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் தலைநகர் லா பாஸில் உள்ள அரண்மனை மீது தாக்குதல் மேற்கொண்ட சில மணிநேரத்தில் சதிப்புரட்சி குழுவின் தலைவர் கைதானார்.**

சதிப்புரட்சி முயற்சியைத் தொடர்ந்து தலைநகரில் அரசாங்கத்தின் முக்கிய கட்டடங்கள் அமைந்துள்ள முரிலோ சதுக்கத்தில் கவச வாகனங்களுடன் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டனர் - பின்னர் அவர்கள் விலக்கப்பட்டனர்.

ஜனநாயகத்தை மீண்டும் மறுசீரமைக்க விரும்புவதாக கிளர்ச்சிக் குழுவின் தலைவரான ஜெனரல் ஜூவான் ஜோஸ் சூனிகா தெரிவித்தார்.

நான் ஜனாதிபதியை மதிக்கின்றேன். ஆனால், ஆட்சி மாற்றம் இடம்பெறும் எனத் தெரிவித்த அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி லூயில் ஆர்சே இந்த சதிப்புரட்சியை கண்டித்துள்ளதுடன் பொதுமக்கள் ஜனநாயகத்துக்காக அணிதிரளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். மீண்டும் பொலிவியாவில் சதிப்புரட்சி முயற்சிகள் உயிர்களை பலிகொள்வதை அனுமதிக்க முடியாது என அவர் கூறினார்.

இராணுவத்தின் தலைமையில் மாற்றங்களை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் பின்னர் ஜனநாயக சார்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். (எ)

# ரஷ்ய இராணுவ அமைச்சருக்கு சர்வதேச நீதிமன்று பிடியாணை

மொஸ்கோ, ஜூன் 28

உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வரும் ரஷ்ய இராணுவ அமைச்சருக்கு எதிராக நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் தொடுத்தது. இரண்டு ஆண்டுகளைத் தாண்டியும் இந்தப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் ரஷ்யா கடந்த 2022 ஒக்டோபர் மாதம் உக்ரைனின் குடியிருப்புப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தியது. இதில் அப்பாவி பொதுமக்கள் பலர் உயிரிழந்தனர். ரஷ்யாவின் இந்தச் செயல் மனிதத் தன்மையற்றது என பல நாடுகளும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இதனையடுத்து ரஷ்யா மீது நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் இராணுவ அமைச்சர் செர்ஜி சோய்கு மற்றும் இராணுவத் தளபதி வலேரி ஜெராசிமோவ் ஆகியோருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்கில் ஏற்கனவே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீதும் சர்வதேச நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. (எ)

# கென்யாவில் நிதிச்சட்டம் திரும்பப்பெறப்பட்டது

நைரோபி, ஜூன் 28

தொடர் போராட்டங்களையடுத்து வரி உயர்வுக்கான நிதிச் சட்டம் திரும்பப் பெறப்படுகிறது என்று கென்ய ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ அறிவித்துள்ளார்.

கென்யாவில் வரி உயர்த்துவதற்கான செயல் திட்டம் அடங்கிய நிதிச் சட்ட வரைவு பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படயிருந்தது. இந்த நிலையில், இந்த வரி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த சில நாட்களாக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்த நிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு அறிவித்துள்ளார். (எ)



# மழை, வெள்ளத்தில் சிக்கி நேபாளத்தில் 14 பேர் பலி

காஸ்கி, ஜூன் 28

நேபாளத்தில் கனமழை, வெள்ளம், நிலச்சரிவுகள் மற்றும் மின்னல் தாக்கியதில் 14 பேர் பலியாகினர்.

நேபாளத்தில் பருவமழை காலம் தொடங்கியதில் இருந்து அந்த நாட்டில் கனமழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக நிலச்சரிவுகளும் ஏற்பட்டு வருகின்றன. கனமழையால் கடும் மின்னல் தாக்கமும் ஏற்பட்டுள்ளது.

கனமழை, வெள்ளம், நிலச்சரிவுகளால் பொதுமக்களின் வாழ்க்கை, சொத்துகள், உட்கட்டமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பெருமளவில் பாதிப்பு ஏற்படுகின்றன. (எ)

பாராளுமன்றத்துக்கு தீ!

# போராட்டக்காரர்களின்மீது துப்பாக்கி சூடு! 22 பேர் பலி

நைரோபி, ஜூன் 28

கென்யா பாராளுமன்றத்துக்குத் தீ வைத்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் 22 பேர் உயிரிழந்தனர்.

கென்யாவில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவிவரும் நிலையில் அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களுக்குமான வரியை உயர்த்தப்போவதாக அந்த நாட்டின் அரசு அண்மையில் அறிவித்தது. இதனையடுத்து பாராளுமன்றத்தில் வரி உயர்வு சட்ட வரைவு தாக்கல் செய்யப்பட்டு சட்டம் நிறைவேற்றப்படயிருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் பாராளுமன்றத்தில் வரி உயர்வு சட்ட வரைவு மீது விவாதம் நடந்து கொண்டிருந்தது.



அப்போது ஆயிரக்கணக்கானோர் பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் அங்கே இருந்த தடுப்புகளை உடைத்து கொண்டு உள்ளே நுழைந்தனர். பின்னர் பாராளுமன்ற கட்டடத்தை தீ வைத்து கொளுத்தினர். இதனால் கட்டடம் கொழுந்துவிட்டு எரிந்தது. இதனையடுத்து போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியும், நீர்த்தாரை பிரயோகத்திலும் ஈடுபட்டனர். ஆனாலும், போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

இதனையடுத்து போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 22 பேர் பலியாகினர். 50.இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். (எ)

# மீண்டும் சபாநாயகரானார் ஓம் பிர்லா

புதுடில்லி, ஜூன் 28

இந்தியாவின் மக்களவை சபாநாயகராக ஓம் பிர்லா மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். குரல் வாக்கெடுப்பு மூலம் நடந்த தேர்தலில் மக்களவை சபாநாயகராக ஓம் பிர்லா தேர்வு செய்யப்பட்டார். பிரதமர் மோடி, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் அவரை அழைத்து வந்து சபாநாயகர் இருக்கையில் அமர வைத்தனர். இதன்மூலம் கடந்த 25 ஆண்டுகளில் தொடர்ந்து இரண்டாவது முறையாக மக்களவை சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டவர் என்ற பெருமையை பெற்றார் ஓம் பிர்லா. (எ)



# செங்கோலை அகற்றும் கோரிக்கை நிராகரிப்பு

புதுடில்லி,ஜூன் 28



இந்தியாவின் மக்களவையில் உள்ள செங்கோலை அகற்ற வேண்டும் என்ற சமாஜ்வாதி கட்சியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

சமாஜ்வாதி கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஆர். கே. சௌத்ரி, மக்களவை சபாநா யகருக்கு எழுதிய கடிதத்தில், "மக்களவையில் சபாநாயகர் இருக்கை அருகே வைக்கப்பட்டுள்ள செங்கோலை அகற்ற வேண்டும். பாராளுமன்றம் என்பது ஜனநாயகத்தின் கோவில், அரசர் அல்லது இளவரசரின் மாளிகை அல்ல.

முடியாட்சி அல்லது ஏகாதிபத்தியத்தின் அடையாளமாக திகழ்வது செங்கோல். எனவே, செங்கோலை அகற்றிவிட்டு அந்த இடத்தில் இந்திய அரசியல் சாசனத்தை வைக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு மீண்டும் செங்கோல் வைக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியரின் சம்பள முரண்பாடு 2025 ஜனவரிக்குள் தீர்ப்பதற்கு குழு!

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

**அரச ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை 2025 ஜனவரிக்குள் தீர்ப்பதற்கு குழு ஒன்று அமைக்கப்படும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தேர்தல் ஒத்திவைக்கப்படுமா என்ற விவாதம் நாட்டில் நிலவி வருகிறது. அத்துடன், பொதுத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா என்பது குறித்தும் கலந்துரையாடப்படுகிறது.

ஆனால், அரசாங்கம் என்ற ரீதியில் நாம் முதலில் ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதை முதலில் கூற வேண்டும். அரசமைப்பு ரீதியாக தேவையானது ஜனாதிபதி தேர்தல். நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்படும்போது, அது நேரடியாக மக்களை பாதிக்கிறது. எனவே, இந்த நாட்டுக்கு நிலையான அரசாங்கம் தேவை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் பொதுத் தேர்தலை நடத்தலாம். அரசமைப்புக்கு புறம்பாக செயல்பட்டு தேர்தலை ஒத்திவைக்க நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் உள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன் 2022ஆம் ஆண்டு மே மாதம் இந்த நாட்டில் இருந்த நிலைமையை நாம் அனைவரும் புரிந்து கொண்டோம். மக்கள் வீதிகளில் எரிபொருள் வரிசை மற்றும் எரிவாயு வரிசையில் நின்றுகொண்டிருந்தனர். ஒரு காலத்தில் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல் போனது.

ஈஸ்டர் தாக்குதல், கோவிட் தொற்றுநோய் சூழ்நிலையால் எங்களுக்கு ஏற்பட்ட வெளிநாட்டு நிதி பிரச்னைகளால் நாங்கள் எதிர்கொண்ட சூழ்நிலையை நாங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அப்போது ரணில் விக்கிரமசிங்க மட்டுமே சவாலை ஏற்றுக்கொண்டார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்றத்தில் சிறு குழுவாக நாங்கள் உதவி செய்தோம். அனுபவத்துடனும் முதிர்ச்சியுடனும் சவால்களை ஏற்கும் திறமையுடனும் அந்த வேலையைச் செய்வார் என்று நாங்கள் நம்பினோம்.


இரண்டு வருடங்கள் பின்னோக்கிப் பார்க்கும் போது, நாம் எதிர்பார்த்ததை செய்திருக்கிறார். இப்போது ரணில்தான் ஆள் என்ற கருத்து கிராம மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அப்படியானால், அன்று நாங்கள் எடுத்த முடிவு சரியானது என்று நினைக்கிறோம்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு பிறகு சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்துள்ளது. சுற்றுலா பயணிகள் வரத் தொடங்கிய நேரத்தில் கோவிட் தொற்றுநோய் காரணமாக நாட்டை மூட வேண்டியிருந்தது. நாட்டை திறந்துவிட்டு சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியதும் தொழிற்சங்கத்தினர் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து அவர்களை வரவிடாமல் தடுத்தனர். இன்று ஒரு நல்ல செய்தி வரவிருக்கும் நேரமும் இவ்வாறு செய்கின்றனர்.



Prasanna

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை 2025 ஜனவரிக்குள் தீர்க்க ஒரு குழுவை அமைத்து 3 மாதங்களுக்குள் அறிக்கை அளிக்குமாறு கூறியுள்ளோம். தருகிறோம் என்று சொன்னாலும், பிரான்ஸ் மாநாட்டின் மூலம் நம் நாட்டுக்கு கிடைக்கும் சலுகையை குறைத்து, அரச சேவையை நல்ல நிலைக்கு கொண்டு செல்லும்போது, இந்த நாட்டை அராஜகமாக்கி - மீண்டும் சீரழிக்க இவர்கள் எல்லாம் செய்கிறார்கள். பொருளாதார ரீதியாக அவர்களின் நிகழ்ச்சி நிரலை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். எனவே, இதனை இந்நாட்டு மக்கள் புத்திசாலித்தனமாக பார்ப்பார்கள் என நான் நம்புகிறேன் - என்றார். (ஐ)



# தலதா மாளிகையில் ஜனாதிபதி வழிபாடு

கொழும்பு, ஜூன்

கண்டி வரலாற்று சிறப்புமிக்க சிறீ தலதா மாளிகைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கண்டிக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மல்வத்தை மகா விகாரையின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே சுமங்கல தேரர், அஸ்கிரிய மகா விகாரை மகாநாயக்கர் வரக்காகொட ஞானரதன தேரர் ஆகியோரை சந்தித்து ஆசி பெற்றார்.

நாடு அடைந்துள்ள பொருளாதார மற்றும் நிதி முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தியதுடன், கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தையும் அவர்களிடம் கையளித்தார். (ஐ)

# கிராம உத்தியோகத்தர்கள் 3 தினங்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 28

தாங்கள் முன்வைத்த பல கோரிக்கைகளுக்கு தீர்வு காண்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளமையை கண்டித்து மூன்று நாட்கள் கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

போக்குவரத்து கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு, சீருடை கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு போன்றவற்றை அதிகரிக்குமாறு கோரியே இந்த தொழில் சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சங்க போராட்டம் இன்றும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அவர்கள் வார இறுதி நாட்கள் மற்றும் விசேட அரச விடுமுறை நாட்களில் வேலை செய்யப் போவதில்லை.

# டயானாவின் வழக்கிலிருந்து இரு நீதியரசர்கள் விலகினர்

கொழும்பு, ஜூன் 28

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகளில் இருந்து இரண்டு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் விலகியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்து உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் டயானா கமகே செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்துகளால் நீதிமன்றத்தை அவமதித்தார் என்று கூறி அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு வெலிகம மாநகர சபையின் தலைவர் ரெஹான் ஜயவிக்ரமவினால் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில, நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதியரசர்களான ஜனக் டி சில்வா மற்றும் குமுதினி விக்கிரமசிங்க ஆகியோர் இந்த வழக்கில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இந்த வழக்கை எதிர்வரும் ஒகஸ்ட் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# கொழும்பில் வெள்ளப்பெருக்கு அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, ஜூன் 28

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் அறிக்கை வழங்குமாறும் அந்த அறிக்கையின் அடிப்படையில் ஆரம்ப அறிக்கையை தயாரித்து இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி பணிமனையில் சமர்ப்பிக்குமாறும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இதன் பிரகாரம், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடி இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான திட்டங்களை உடனடியாகத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

மோசமான காலநிலை காரணமாக கொழும்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமைக்கான காரணங்களை கண்டறிந்து அதற்கு தீர்வு காண்பதற்காக துறைசார் நிறுவனங்களின் தலைவர்களுடன் புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் சேதமடைந்த பகுதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் குறித்த பிரதேச அரசியல் பிரதிநிதிகள் நேரில் சென்று அவதானித்ததாகவும் இயற்கை காரணங்களைப் போன்று, ஒழுங்கற்ற மனித செயல்பாடுகளும் வெள்ள நிலைமை ஏற்பட காரணமாக உள்ளமை இனம் காணப்பட்டுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (ஐ)

# கொள்ளையர் குழு தாக்கியதில் மனைவி பலி; கணவன் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 28

கொள்ளையடிப்பதற்காக வீட்டுக்குள் நுழைந்த குழு தாக்கியதில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார். அவரின் கணவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி - எஹலியகொடை - அராபொல பிரதேசத்தில் நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வயோதிப தம்பதியர் மட்டுமே வீட்டில் வசித்து வரும் நிலையில் அவர்களின் பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கின்றனர்.

நேற்று அதிகாலை வீட்டுக்குள் நுழைந்த குழு மனைவியை கூரிய ஆயுதத்தால் குத்திக் கொன்றனர். அத்துடன், கணவரையும் தாக்கியதுடன் அவரின் கை, கால்களை கட்டிப் போட்டுவிட்டுச் சென்றனர்.

கொள்ளை நோக்கத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும், கொள்ளையிடப்பட்ட பொருட்கள் குறித்த விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# விசர் நாய் கடித்த சிறுமி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

விசர்நாய் கடிக்கு சிகிச்சை பெற்று வந்த 4 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

குமாரசாமிபுரம் கிளிநொச்சியை சேர்ந்த சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார். குறித்த சிறுமி 3 நாட்களுக்கு முன்னர் விசர் நாயக் கடிக்கு உள்ளானார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் புதன்கிழமை உயிரிழந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீனா...

பிரதமர் லீ கியாங், வெளிவிவகார அமைச்சர் வாங் யீ ஆகியோரை சந்தித்துப் பேசுவார்.

இந்த மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ரணிலின்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்றும் நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டு, ஒட்டுமொத்த நாடும் பொய்களால் வஞ்சிக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியால் கண்துடைப்பு நாடகமே அரங்கேற்றப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அவரின் விசேட உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

**365** நாட்களும் **24** மணி நேரமும் பொய் சொல்வதையே வழக்கமாகவும், தொழிலாகவும் கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றார் ஜனாதிபதி.

இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி, இருக்கும் ஒன்றை இல்லையென்று சொல்லி, பொய்யை உண்மையாக்கி, உண்மையைப் பொய்யாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான மாயையான பயணத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால், நாட்டின் உண்மை நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உண்மையை இந்த நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும். எமது நாடு 92 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான கடனில் சிக்கித் தவிக்கின்றது.

இந்தக் கடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களைக் கொண்டுள்ளது. இந்தக் கடன் தொடர்பில் அறியும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது." - என்றார். (அ)

### ஆசிரியர்...

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் ஸ்ரீ வரகாகொட ஞானரதன தேரரை நேற்று வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர்களும், அதிபர்களும் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும் எனவும், அவர்கள் போராட்டங்களிலும், வேலைநிறுத்தங்களிலும் ஈடுபடும் போது, எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கு அவர்களால் எவ்வாறு அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் என சிந்திக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஒட்டுமொத்தமாக ஆசிரியர் சேவையிலிருக்கும் சகலரும் இந்த போராட்டத்தில் பங்கெடுக்கவில்லை என்றும் அரசியல் சார்ந்தவர்களே இதில் பங்கெடுத்திருப்பதாக தனக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதனால் ஒட்டுமொத்த ஆசிரியர் தொழிலுக்கும் களங்கம் ஏற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

சிங்கள பாடசாலைகளுக்குள் மாத்திரமே இந்த பணிப் புறக்கணிப்பு காணப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி, தமிழ், முஸ்லிம், தனியார் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் வழமைப்போல நடைப்பெறுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாடசாலையின் பாதுகாவலர்கள் மாணவர்களை திருப்பி அனுப்புவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும், அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை

### முடிவுக்கு...

ஒன்றாகும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை தேவைக்கு ஏற்ப மீண்டும் சர்வதேச கடன்களை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (அ)

### மயிலத்தமடு...

சபை அதிகாரிகள், வனத் திணைக்கள அதிகாரிகளை சந்தித்து உரையாடினார்.

இதன்போதே மேற்கண்ட விடயங்களை ஜனாதிபதி தெரிவித்தார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

### இன்று...

இந்த நிலையில், இன்றைய தினம் முதல் வழக்கம் போன்று அதிபர், ஆசிரியர்கள் கடமைக்குத் திரும்புவர் என்று நேற்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் நேற்றுத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### கல்வி...

போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனால், நேற்றும் பாடசாலைகளுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் சமுகமளிக்கவில்லை. இதனால், பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்களும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ஆசிரியர்களின்...

நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்களின் சம்பளத்தை உயர்த்தாமல், ஆசிரியர்களின் சம்பளத்தை மட்டும் உயர்த்த முடியாது.

அப்படி ஆசிரியர்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்பட்டால் அது வேறு பல பிரச்னைகளை உருவாக்கும். 2025ஆம் ஆண்டு ஆகும்போது நிச்சயம் அவர்களின் சம்பள பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் - என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)

### சூளையில்...

தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையில் மாரடைப்பு காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப் பட்டது.

மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

### விமல்...

இடதுசாரி தேசியவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை மக்களின் முதன்மையான மாற்றமாக "சர்வஜன பலய" கூட்டணி உருவெடுத்துள்ளது. இடதுசாரி தேசியவாதத்தை ஆதரிக்கும் ஒரே அரசியல் குழு தனது கூட்டணி என்று கூறிய அவர், மற்ற அனைத்து கட்சிகளும் வலதுசாரி என்ற பதாகையின் கீழ் ஒன்றுபட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகிய அனைவரும் அதனை கடைப்பிடிப்பதாகவும், தமது கூட்டணி மக்களுக்கு தனித்துவமான மாற்றீடை வழங்கும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான அரசியல் பிரசாரங்களை விரைவில் ஆரம்பிக்க சர்வஜன பலய கூட்டணி தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் பெயரிடப்படுவார் எனவும் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்,

எனினும், அந்த வேட்பாளர் யார்

# நாவாந்துறையில் வீடு தீப்பிடித்து எரிந்து நாசம்



யாழ்ப்பாணம், ஜூன் 28

நாவாந்துறையில் வீடு ஒன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கால் ஏற்பட்ட தீ விபத்தில் வீட்டின் மேல் தளத்தில் இருந்த சுமார் 10 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துகள் எரிந்து நாசமாகின.

நேற்று வியாழக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டை பூட்டிவிட்டு உரிமையாளர் வேலைக்கு சென்றுள்ளார். இதன் பின்னரே வீடு தீப்பற்றி எரிந்தது. இதனை அவதானித்த அயலவர்கள் மின்சாரத்தை நிறுத்திவிட்டு தீயைக் கட்டுப்படுத்தினர்.

இதனிடையே, தீப்பரவலில் வீட்டின் மேல் தளத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகின. சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் இவ்வாறு தீயில் எரிந்து நாசமாகின என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# இறந்தவர்கள் 6 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியம் வழங்கியமை அம்பலம்

கொழும்பு, ஜூன் 28

கம்பஹா மாவட்ட செயலக அதிகாரிகள் குழுவொன்று அண்மையில் கோபா குழுவுக்கு அழைக்கப்பட்ட நிலையில், 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இறந்த ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாக கோபா குழுவில் தெரிய வந்துள்ளது.

துணை கணக்காய்வாளர் ஜெனரல் எம்.எஸ். நயனகுமார இந்தத் தகவலை குழுவில் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலக அலுவலகங்கள் மற்றும் ஓய்வூதிய திணைக்களத்தின் தவறான செயல்பாடுகளால் இந்த முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. முப்படையினருக்கு அதிகளவான ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கோபா குழுவில் தெரியவந்துள்ளது.

இறந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை செலவுகளும் அதிகளவில் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 6,400 சட்டவிரோத ஓய்வூதியங்கள் பதிவாகியுள்ளன என்றும் கோபா குழு உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது.

# மண்சரிவில் 8 வீடுகள் சேதம்!

கொழும்பு, ஜூன் 28

இரத்தினபுரி - எஹெலியகொட - உடுவாக பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மண்சரிவில் 8 வீடுகள் முற்றாக சேதமடைந்தன என்று எஹெலியகொடை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

மண்சரிவு ஏற்பட்ட பகுதியிலிருந்து 48 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேர் அந்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டு பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதியில் கலா ஓயா கடப்பதால் அந்தப் பகுதியில் வெள்ளம் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அமைச்சு பதவி பெறமாட்டேன் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பேன்

## ராஜித சேனாரட்ன எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியைப் பெறுவதற்கு நான் தயாரில்லை. எனினும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துக்குத் தேவையான ஆதரவை வழங்க தயாராக உள்ளேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்களால் 15-20 வரையான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவரப்பட்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை சீர்குலைக்கும் எண்ணம் எனக்கு இல்லை. நான் வாழும் காலத்தில் இலங்கை முன்னைய சோமா

பட்டால் அதனை ஏன் எதிர்க்க வேண்டும்?.

எதிர்க்கட்சியில் இருந்தாலும் மக்களுக்கான நல்ல திட்டங்களை நாம் ஆதரிக்க வேண்டும். ஜனாதிபதியின் செயல்பாடுகளை முன்னோக்கி கொண்டுசெல்ல அனைத்துக் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அதானி நிறுவனத்தின் காற்றாலை மின் திட்டத்தில் பெரும் நிதி மோசடி

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 28

**இந்தியாவின் அதானி நிறுவனம் முன்னெடுத்துள்ள மின்னுற்பத்தி திட்டங்களில் பெரிய நிதிமோசடி இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது**

மன்னார் பூநகரியில் காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்தியாவின் அதானி கிறீன்ஸ் எனர்ஜி நிறுவனத்துக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமை குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

நாட்டின் வலுசக்தி துறையின் காற்று வலுசக்தி துறையை ஜனாதிபதியும் அமைச்சர் காஞ்சன விஜயசேகரவும் இந்திய நிறுவனத்துக்கு வழங்கியதால் பெருமளவிலான நிதி மோசடி இடம்பெறுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அதானி கிறீன்ஸ் எனர்ஜி நிறுவனம் மூலம் மன்னார், பூநகரியில் காற்றாலை காற்றாலை மின்நிலையங்களை உருவாக்க முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தை கேள்விப் பத்திரத்தை கோராமல் இந்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளனர். இதனால், 20 வருடங்களில் இலங்கை பல மில்லியன் டொலர்களை இழக்கவேண்டிய நிலையேற்படும்.

வின்ட்போர்ஸ் என்ற நிறுவனம்



காற்றுமின்சக்தி நிலையத்தை உருவாக்க முன்வந்தது அந்த நிலையம் அதானி நிறுவனத்தை விட அதிக விலையை வழங்க முன்வந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கேள்விப்பத்திர முறைகள் மூலம் இந்த நிறுவனத்திற்கு 50 மெகா வோட்ஸ் காற்றுமின்சக்தி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை அனுமதிவழங்கியுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# விபத்துகளால் நாளாந்தம் 7 பேர் உயிரிழக்கின்றனர்

## இறப்பவர்களில் இளைஞர்களே அதிகம்



கொழும்பு, ஜூன் 28

நாட்டில் வீதி விபத்துகளால் நாளாந்தம் சுமார் 7 பேர் உயிரிழக்கின்றனர் உயிரிழப்பவர்களில் பெரும்பாலானவர்கள் 18 - 28 வயதுப் பிரிவினர் என்று போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.

மேலும், "இலங்கையில் வருடாந்தம் விபத்துக்களில் 12 ஆயிரம் பேர் இறக்கின்றனர். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் வீதி விபத்துகளால் மரணிக்கின்றனர்.

நாட்டில் நாளொன்றுக்கு சுமார் 7 அல்லது 8 பேர் விபத்துகளில் இறக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் செலுத்துநர்கள், அவர்களுடன் பயணிப்பவர்களாவர்.

18-28 வயதுக்கு இடைப்பட்ட வயதினரே இவ்வாறு அதிகம் உயிரிழக்கின்றனர். கடந்த ஆண்டு, 2,310 பேர் உயிரிழந்தனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவதே அதிக விபத்துக்குக் காரணம் என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# நுவரெலியாவில் அதிகமழை!

நுவரெலியா, ஜூன் 28

அதிக மழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று நேற்றுத் திறக்கப்பட்டது.

அந்தப் பகுதிகளில் மேலும் மழை பெய்தால் நீர்த்தேக்கத்தின் ஏனைய வான்கதவுகள் திறக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மக்களை அவதானமாக இருக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு கேட்டுள்ளது. (ஐ)

# நிதி மோசடியில் ஈடுபட்ட 60 இந்திய நாட்டவர் கைது

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் நிதி மோசடியில் ஈடுபட்ட 60 இந்திய நாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தலங்கமை, மாத்திவெல, நீர்கொழும்பு பகுதிகளில் இணையத்தின் மூலம் மோசடியில் ஈடுபட்ட நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் கைது செய்யப்பட்ட போது, 135 கைபேசிகள் மற்றும் 57 மடிக்கணினிகள் என்பவற்றையும் குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# விடத்தல் தீவு குறித்த வர்த்தமானி உயர்நீதிமன்றம் இடைக்கால தடை

கொழும்பு, ஜூன் 28

விடத்தல்தீவு இயற்கை சரணாலயத்தின் ஒரு பகுதியை இறால் பண்ணை திட்டத்துக்கு ஒதுக்கும் வகையில் வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி வெளியிட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்த உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

மீன் வளர்ப்பு தொழில்பூங்காவை அமைப்பதற்காக மன்னார் மாவட்டம் விடத்தல்தீவு இயற்கை சரணாலயம் என குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் முடிவுக்கு வருவதாக மே மாதம் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தது.

எனினும், அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக சூழல் நீதிக்கான நிலையம் நீதிமன்றத்தில் வழக்குதாக்கல் செய்தது.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்த இடைக்கால தடை விதித்துள்ளது. (ஐ)

# 7 சதவீத கடன் தள்ளுபடியே இணக்கப்பாட்டால் கிடைத்தது

## இது நற்செய்தியல்ல என்கிறார் ஹர்ஷ

கொழும்பு, ஜூன் 28

சர்வதேச கடன் வழங்குநர்களுடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கமைய 7 சதவீத கடன் தள்ளுபடி மாத்திரமே கிடைக்கப்பெறவுள்ளது. 28 சதவீத கடன் தள்ளுபடி எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வெறும் 7 சதவீதத்துக்கு மாத்திரம் இணக்கம் காணப்பட்டமை ஒரு நற்செய்தியல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதில், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையை செவிமடுத்தோம். அதில் நாட்டுக்கு சிறந்த தாய் யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் நாணய நிதியத்தை நாட வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் தற்போது அதனை எதிர்க்கின்றனர் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தி எல்லா விடயங்களுக்கும் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை. ஜனாதிபதிக்கு இந்த உரையை எழுதிக் கொடுத்தவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தாலும், அதனை வாசிக்க முன்னர் ஜனா திபதி சற்று சிந்தித்திருக்கலாம். சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு நாமே ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்தோம்.



பிரதான இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களான சீனா, ஜப்பன் இந்தியா உட்பட ஏனைய நாடுகளுடன் இணக்கப்பாட்டை எட்டியமை உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. அதன் ஊடாக நன்மை கிடைக்குமானால் இலங்கை என்ற குழந்தையை அங்குமிங்கும் இழுத்து சிதைப்பதற்கு நாம் தயாராக இல்லை.

இணக்கப்பாட்டுக்கமைய கடன் தள்ளுபடி 50 வீதம் என ஆரம்பத்தில் அரசாங்கம் தெரிவித்தது. பின்னர் 30 சதவீதம் எனத் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் 28 சதவீதமென எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறிருந்தாலும் 7 சதவீத தள்ளுபடியே கிடைத்தது. இந்தளவு குறைந்த மட்டத்துக்கு உடன்பாட்டை எட்டியமை நாட்டுக்கு நற்செய்தியல்ல. மக்களுக்கு பாதகமே. இதற்கு அரசாங்கம் முன்வைத்துள்ள பரிசீலனை பரிந்துரைகளின் பிரகாரம் முன்னோக்கி செல்லும் தீர்மானத்துக்கு வந்தால் இது குறித்து கலந்துரையாடலாம் - என்றார். (ஐ)

# இலங்கை வம்சாவழி பெண் பின்லாந்தில் படுகொலை!

கொழும்பு, ஜூன் 28

இலங்கை வம்சாவழியைச் சேர்ந்த பெண் ஒருவர் பின்லாந்தில் படுகொலை செய்யப்பட்டார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் 3 பிள்ளைகளின் தாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலை சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண் பின்லாந்தில் பிரபல யூ - ரியூப் தளத்கை நடத்தி வந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் தனது குடும்பத்தினருடன் நீண்டகாலமாக பின்லாந்தில் வசித்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் வீட்டுக்கு சென்ற அயலவர் ஒருவர் குறித்த பெண்ணின் சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு தெரிவித்ததை அடுத்தே இந்தக் கொலை பற்றிய விவரம் தெரிய வந்தது. (ஐ)

நீதியரசர்கள் பதவி நியமனம்:

# ஜனாதிபதிக்கு தடை விதித்த வழக்கை விரைந்து முடிக்க முடிவு

கொழும்பு, ஜூன் 28

பிரதம நீதியரசர் தவிர மற்ற பதவிகளுக்கு நீதியரசர்கள் நியமனம் செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் ஜனாதிபதிக்கு தடை உத்தரவு பிறப்பித்தது தொடர்பான அடிப்படை உரிமை மனுவை விரைந்து விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

குறித்த தடை உத்தரவை நீக்க அல்லது மாற்றியமைக்க உத்தரவிடுமாறு கோரி வண. தம்பர அமில தேரர் மற்றும் கலாநிதி மாஹிம் மெண்டிஸ் ஆகியோர் தாக்கல் செய்த 2 இடைக்கால மனுக்களை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதை அடுத்து, இந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூலை 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org